RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 306 | நவம்பர்.6 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# ‘திமுக அரசு மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்துவிட்டது’ : விஜய்

சென்னை: நவ.6-

திமுக அரசு மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்துவிட்டதாக தவெக தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் விஜய் தலைமையில் சென்னை அருகே மாமல்லபுரத்தில் இன்று கூடியது. இதில், கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வரவேற்புரை ஆற்றினார். இதைத் தொடர்ந்து கரூர் கூட்ட நெரிசலில் சிக்கிய உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் உட்பட 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுக்குழுவின் இறுதியாக விஜய் தலைமையுரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது: நமது குடும்ப உறவுகளை இழந்ததால் சொல்ல முடியாத வேதனையுடனும், வலியுடனும் இத்தனை நாட்களாக நாம் இருந்தோம். அந்தச் சூழலில் அவர்களுடன் சேர்ந்து அமைதி காத்து வந்தோம்.

அமைதி காத்து வந்த நேரத்தில் நம்மைப் பற்றி வன்ம அரசியல் வலைகள், அர்த்தமற்ற அவதூறுகள் பிண்ணப்பட்டன, பரப்பப்பட்டன. இவை அனைத்தையும் சட்டம் மற்றும் சத்தியத்தின் துணைக் கொண்டு நாம் துடைத்தெறியத்தான் போகிறோம்.

அதற்கு முன்பாக தமிழக சட்டமன்றத்தில் நமக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஓர் உரைக்கு ஒரு நாகரிக பதிலடி கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அரசியல் செய்ய விருப்பவில்லை, அரசியல் செய்ய விருப்பமில்லை என அடிக்கடிச் சொல்லும் முதல்வர், பெருந்தன்மையை பெயரளவில் மட்டுமே பேசும் முதல்வர், 15.10.2025 அன்று தமிழக சட்டப்பேரவையில் நமக்கு எதிராகப் பேசிய பேச்சில் எவ்வளவு வன்மத்தைக் கக்கியுள்ளார் என்பதையும் எப்படிப்பட் ஒரு அரசியலைச் செய்ய முயல்கிறார் என்பதையும் தமிழக மக்கள் உணராமலா இருப்பார்கள்?

கரூரோடு சேர்ந்து 5, 6 மாவட்டங்களில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நாம் நடத்தி இருக்கிறோம். அங்கே எல்லாம் கடைசி நிமிடம் வரை அந்த இடத்தைக் கொடுப்பார்களா மாட்டார்களா என்றே தெரியாது. நான் நாகையில் சொன்னதுபோலத்தான், மக்கள் நெருக்கடி இல்லாமல் இருப்பதற்கு ஏற்ப நாங்கள் ஓர் இடத்தை தேர்வு செய்து கேட்போம். ஆனால், மக்கள் நெருக்கடியோடு நிற்பதற்கு ஏற்ற ஓரிடத்தை தேர்வு செய்து கொடுப்பார்கள். எல்லா இடத்திலும் இப்படித்தான் நடக்கும்.

அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே எந்த ஒரு அரசியல் தலைவருக்கும் இல்லாத கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பேருந்துக்குள்ளேயே இருக்க வேண்டும், மேலே வந்து கை காட்டக்கூடாது. இப்படி அதீத கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோது இது தொடர்பாக நாங்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டோம். அனைத்து கட்சிகளுக்கும் சமமான முறையான ஒரு பொதுவழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க



வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தையும் நாடினோம். இதையும் தமிழக மக்கள் உணராமலா இருப்பார்கள்?

அரசியல் காழ்ப்புணர்வுடன் நேர்மை திறமற்று நம்மைப் பற்றி குற்றம் சாட்டியுள்ள குறுகிய மனம் கொண்ட முதல்வருக்கு ஒரு சில கேள்விகளை முன்வைக்கிறேன். 13.10.2025 அன்று உச்ச நீதிமன்றத்தில் நடந்த அந்த விவாதங்களை வைத்தும் உத்தரவுகளை வைத்தும் இந்த கேள்விகளை முன்வைக்கிறேன்.

பொய் மூட்டைகளை நமக்கெதிராக அவிழ்த்துவிட்ட முதல்வருக்கும் திமுக அரசுக்கும் ஆதரவாக வாதாடுவதற்காக கோடிகளைக் கொட்டி அமர்த்தப்பட்ட அறிவார்ந்த வழக்கறிஞர்கள், இந்த கபட நாடக திமுக அரசின் தில்லுமுள்ளுகளை தாங்கிப் பிடிக்க முடியாமல் உச்ச நீதிமன்றத்தில் திக்கித் திணறி நின்றது முதல்வருக்கு மறந்துவிட்டதா?

கரூர் சம்பவத்துக்குப் பிறகு அவசர அவசமாக ஒரு தனி நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த தனி நபர் ஆணையத்தையும் அவமதிக்கும் வகையில் அரசு உயர் அதிகாரிகள், காவல்துறை உயர் அதிகாரிகள் நம்மைப் பற்றி அவதூறு பரப்பி ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தினார்கள். அவசர அவசரமாக இவை எல்லாம் ஏன் நடக்கிறது? எதற்காக நடக்கிறது? என ஒட்டுமொத்த தமிழக மக்களும் கேள்வி கேட்க தொடங்கினார்கள். இதையும் தமிழக முதல்வர் மறந்துவிட்டாரா? அதன்பிறகு, அந்த தனி நபர் ஆணையத்தையே தலையில் கொட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அது வேறு விஷயம்.

இப்படி எல்லாம் கேள்வி கேட்ட உடனேயே, அவற்றுக்கு பதில் சொல்ல வேண்டுமல்லவா? சட்டமன்றத்தில் பேசும்போது உண்மை நிலையை தெளிவுபடுத்த ஏதோ சட்ட ரீதியாகவும் சத்தியத்தின் படியும் பேசுவதாக நினைத்துக்கொண்டு முதல்வர் ஏதேதோ பேசினார். 50 வருடமாக பொது வாழ்க்கையில் உள்ள ஒருவர், ஒரு முதல்வர் எவ்வளவு பெரிய வடிகட்டிய பொய்யைப் பேசியுள்ளார் என்பதை நான் சொல்லவில்லை, உச்ச நீதிமன்றமே சொல்லி உள்ளது.

அரசு காவல் உயர் அதிகாரிகள் ஊடகங்களிடம் பேசியது, நியாயமான விசாரணை நடக்குமா என்ற சந்தேகத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்தக்கூடும் என்றும் நியாயமான விசாரணையின் மூலம் அந்த சந்தேகத்தை மீட்டெடுத்தே ஆக வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தமிழக அரசின் தலைமையில் ஓங்கி நறுக்கு நறுக்கு நறுக்கென்று கொட்டியதை முதல்வர் மறந்துவிட்டாரா?

சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதி சிறப்பு விசாரணைக் குழு அமைத்து உத்தரவிட்டார் அல்லவா? அந்த உத்தரவை ஏதோ சட்டத்தின் மீதும் நீதி பரிபாலனத்தின் மீதும் மரியாதை கொண்டவர்கள் போல ஒரு நாடகத்தனமான கொண்டாட்டத்தை திமுகவும் திமுகவுக்கு ஒத்து ஊதுபவர்களும் கொண்டாடி குதூகளித்தார்கள் அல்லவா? தவெகவுக்கு எதிராகவும் நமக்கு எதிராகவும் உயர் நீதிமன்ற நீதியரசர் தீர்ப்பளித்துவிட்டதாக விதந்தோதி விழா எடுத்தனர் அல்லவா?

அந்த உத்தரவைப் பற்றி சொல்லும்போது, எந்த ஆவணத்தின் அடிப்படையில் அந்த உத்தரவு அமைக்கப்பட்டது என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. அப்போதும்கூட உச்ச நீதிமன்றத்தில் திமுக அரசுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞர்கள் பதில் சொல்ல முடியாமல் வாய்மூடி மவுனம் காத்ததை நாடே பார்த்ததல்லவா? இதையும் முதல்வர் மறந்துவிட்டாரா?

பொது வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வந்த ரிட் மனுவை நீதிபதிகள் டிவிஷன் பெஞ்ச்தான் கையாள வேண்டும், தனி நீதிபதி கையாளக்கூடாது என உச்ச நீதிமன்றம் சொன்னதல்லவா? அதுமட்டுமா, கோரிக்கையே இல்லாமல் சிறப்பு விசாரணை குழு மைத்தது எந்தவகையில் சரி என்றும் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. இவை எல்லாமே அறியாமலே அல்லது அறியாதது போலவே உச்சபட்ச அதிகார மயக்கத்தில் இருந்து முதல்வர் பேசினாரோ? மனிதாபிமானம், அரசியல் அறம், மாண்பு இவை எதுவுமே இல்லாமல், வெறும் பேச்சில் மட்டுமே பேசிக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் ஆட்டத்தை ஆடத் தொடங்கிவிட்டார் முதல்வர்.

இவை அவர்களுக்கு புதிதா என்ன? 1969க்குப் பிறகு, இன்னும் சரியாகச் சொல்வதென்றால் 1972க்குப் பிறகு இவர்களை கேள்வி கேட்க ஆளே இல்லாமல் போய்விட்டது. இந்த கேள்விகள் எல்லாம் நான் கேட்டதல்ல, உச்ச நீதிமன்றம் கேட்டவை . இதில் இருந்து என்ன புரிய வருகிறது. அரசு நடத்தும் விசாரணை மேல் சந்தேகம் வருகிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம். உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று அர்த்தம். இவை ஏன் எதற்கு என்று முதல்வருக்குப் புரிகிறதா?

உச்ச நீதிமன்றம் சொன்னதால் மட்டுமல்ல, உண்மையாகவும் இந்த அரசு மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்துவிட்டது. இதுவாவது முதல்வருக்குப் புரிகிறதா? புரியவில்லை என்றால், 2026 தேர்தலில் இந்த திமுக தலைமைக்கு மக்கள் ஆழமாக அழுத்தமாக புரிய வைப்பார்கள். அப்போது கூட இவர்கள் என்ன செய்வார்கள் என்பது தெரியும்தானே. ஐந்து வருடத்துக்கு ஒருமுறை பழக்க தோஷத்தில் ஒரு அறிக்கை வெளியிடுவார்களே, மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்குகிறோம் என்று. அப்படி அறிக்கை வெளியிட்டுவிட்டு அறிவாயலத்தில் ஓடி ஒளிந்து கொள்வார்கள். அவர்களுக்குச் சொல்கிறேன், இப்போதே அந்த அறிக்கையை தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பொதுக்குழுவில் சொன்னதைத்தான் நான் மீண்டும் சொல்கிறேன். இயற்கையும் இறைவனும் நம் தமிழக சொந்தங்களின் வடிவில் மாபெரும் மக்கள் சக்தியாக நம் உடன் நிற்கும்போது எம்மக்களுக்கான அரசியலை தடுப்பவர் எவர்? நமக்கு தற்போது வந்துள்ள இடையூறு தற்காலிகமானதே. எல்லாவற்றையும் தகர்த்தெறிவோம், மக்களுடன் கைகோர்த்து நிற்போம், மக்களோடு களத்தில் நிற்போம், நமது பயணத்தில் தடம் மாறவே மாட்டோம்.

இப்போதும் சொல்கிறேன், 2026ல் இரண்டே இரண்டு பேருக்கு நடுவில்தான் போட்டி. ஒன்று திமுக, மற்றொன்று தவெக. இந்த போட்டி இன்னும் வலிமையாக மாறப் போகிறது. 100% வெற்றி நமக்கே. வாகை சூடுவோம். வரலாறு படைப்போம். நம்பிக்கையோடு இருங்கள். வெற்றி நிச்சயம். இவ்வாறு விஜய் பேசினார்.



## கரூரில் 41 பேர் உயிரிழந்த துயரச் சம்பவத்தன்று பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸாரிடம் சிபிஐ விசாரணை

கரூர், நவ.06-

கரூரில் விஜய் பங்கேற்ற தவெக கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த துயரச் சம்பவத்தன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 10க்கும் மேற்பட்ட போலீஸாரிடம் சிபிஐ அதிகாரிகள் நேற்று விசாரணை மேற்கொண்டனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் செப். 27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உச்சநீதிமன்ற உதரவுப்படி, இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கியுள்ள சிபிஐ அதிகாரிகள், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகுமாறு பல்வேறு துறை அரசு அலுவலர்கள், சம்பவம் நடந்த பகுதியில் கடை வைத்துள்ள வியாபாரிகள், நேரடி சாட்சிகள் என 300க்கும் மேற்பட்டோருக்கு சம்மன் அனுப்பியுள்ளனர்.

கடந்த 2ம் தேதி 10க்கும் மேற்பட்ட வியாபாரிகளிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து, விஜய் பிரச்சாரம் மேற்கொண்ட வாகனத்தில் உள்ள கேமரா பதிவு காட்சிகளை அளிக்குமாறு, சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் நேற்று முன்தினம் சம்மன் அளித்தனர்.

இந்நிலையில், சம்பவம் நடந்த செப். 27ம் தேதியன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கரூர் நகர போலீஸார் மற்றும் பிற காவல் நிலைய போலீஸார் என 10க்கும் மேற்பட்டோரிடம் சிபிஐ அதிகாரிகள் நேற்று விசாரணை நடத்தினர். தொடர்ந்து பல்வேறு தரப்பினரிடம் விசாரனை நடத்தப்படும் என்று சிபிஐ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


## மக்களை பதற்றமாகவே வைத்திருக்க நினைக்கிறது பாஜக: எஸ்ஐஆர் விவகாரத்தில் சீமான் சீற்றம்

சென்னை, நவ.06-

எஸ்ஐஆர் விவகாரத்தில் தேவையற்ற வேலையைச் செய்யும் பாஜக, பதற்றமாகவே வைத்திருக்க நினைப்பதாக நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

இது குறித்து நேற்று திருச்சியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் என்பது கோவையில் நடந்த இது ஒரு நிகழ்வல்ல. பல நிகழ்வுகள் வெளியே தெரியாமல் உள்ளது. தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 6 வயது குழந்தையை வன்புணர்வு செய்து எரித்துக் கொலை செய்துவிட்டு சிறையிலிருந்து வந்தவன் பெற்ற தாயை கொலை செய்கிறான். அவனை நீதிமன்றம் தண்டனையை நீக்கி விடுவிக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது இச்சமூகம் வாழ வாய்ப்பற்று கொடூரமாகிவிட்டதோ எனத் தோன்றுகிறது.

கோவையில் சம்பவம் நடைபெற்ற பகுதியில் நீண்ட நாட்களாக அதிகமாக மது விற்பனை நடைபெற்று உள்ளது. காவல் துறை சுட்டுப் பிடித்தோம் என்கிறார்கள். இதற்கு நாம் அனைவரும் தலைகுனிய வேண்டும். ஒரு பாதுகாப்பற்ற சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ என்ற நடுக்கம் ஏற்படுகிறது. கடும் சட்டங்கள் இருந்தால் தான் இது போன்ற சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியும். பொள்ளாச்சியில், அண்ணா பல்கலையில் என இதுபோன்று பாலியல் வன்புணர்வுகள் தொடர்ச்சியாக நடக்கிறது.



அதிமுக குறித்து நான் சொன்னது விமர்சனமல்ல உண்மையைச் சொன்னேன். அதிமுகவினர் பேசுவதையெல்லாம் ஒரு பொது மனிதனாகப் பாருங்கள். துரோகம், சமூக நீதி, சுயமரியாதை குறித்தெல்லாம் பேச இவர்களில் யாருக்காவது தகுதி இருக்கிறதா? நான்தான் திராவிடத்தின் உண்மையான வாரிசு என்று சொல்லும் போது வெறி வருமா வராதா? அதனால்தான் பேசினேன்.

ஆரியத்தை எதிர்க்க வந்தது திராவிடம் என்கிறார்கள். தமிழர் என்று வைத்தால் பிராமணர்கள் ‘நானும் தமிழன்’ என்று உள்ளே வந்து விடுவார்கள் என்று பெரியார் தொட்டு, வீரமணி வரை பேசி வருகின்றனர். அதே கருத்தைதான் அதிமுகவினர் பேசுகிறார்கள். திராவிடம் என்று இருக்கும்போது ஜெயலலிதாவின் தலைமையை திராவிடத் தலைவர்கள் எப்படி ஏற்றார்கள்?

ஆரியத்தின் முன்பு திராவிடம் மண்டியிட்டது. மண்டியிட்டால் கூட பரவாயில்லை குப்புறவிழுந்து கும்பிட்டது. இதில் சுயமரியாதை பற்றி பேசுகிறீர்கள். இதுதான் தன்மானமா... தமிழினத்தின் தலை நிமிர்வா... சுயமரியாதை இது தானா? காளிமுத்து, திருநாவுக்கரசர் ஆகிய இருவரைத் தாண்டி யாரேனும் ஒருவர் ஜெயலலிதா முன்பாக நிமிர்ந்து நின்று பேசி இருக்கிறார்களா? திமுகவுக்கும் அதிமுகவுக்கும் சுயமரியாதை பற்றி பேச தகுதி இல்லை.

எஸ்ஐஆர் விவகாரத்தில் பாஜக தேவையற்ற வேலையைச் செய்கிறது. மக்களை பதற்றமாகவே வைத்திருக்கப் பார்க்கிறார்கள். அப்போதுதான் செய்கிற தவறு வெளியே தெரியாமல் இருக்கும். ஆவணங்கள் கொடுக்கவில்லை என்றால் பெயர்களை நீக்குவோம் என தேர்தல் ஆணையம் இப்போது தெரிவிக்கிறது.

இரண்டு மாதத்தில் தேர்தலை வைத்துக் கொண்டு என்ன ஆவணங்களை கொடுக்க முடியும்? பிஹார் போன்ற வட மாநிலங்களில் இருந்து தமிழகம் வந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்க இந்த வேலையைச் செய்கிறார்கள். அப்படி வழங்கும் போது தமிழ்நாடு மற்றுமொரு பிஹாராக மாறிவிடும்... என்றார்.

## தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை: மத்திய அரசுக்கு பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை, நவ.06-

‘தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நடுக்கடலில் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்கதையாக உள்ளது. தங்களின் வாழ்வாதாரத்துக்காக உயிரையும் பணயம் வைத்து மீன்பிடிக்கும் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் 31 பேரையும், அவர்களது 3 படகுகளையும் நவ.3ம் தேதி இலங்கை கடற்படையினர் தாக்கி கைது செய்துள்ளனர்.

இத்தகைய அத்துமீறிய செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இலங்கை சிறையிலுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசோடு தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள அனைத்து தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக ஜி எஸ் டி 2.0 வரி சீராய்வு மற்றும் வரிக்குறைப்பு பாராட்டு விழா

கோவை, நவ.06-

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மதுக்கரை வணிகர் சங்கத் தலைமை GST வரி மாற்றியமைத்த மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களின் பாராட்டு விழாவிற்கு அழைப்பிதழ் வழங்க ஆலோசனைக் கூட்டம் க கோவை மதுக்கரையில் நடைபெற்றது விழாவிற்கு மாநிலத் தலைவர் A.M விக்ரம் ராஜா அவர்கள் மண்டல தலைவர் TRசூலூர் சந்திரசேகர் மாவட்டத் தலைவர்நி இருதய ராஜா மாநகர செயலாளர் பாக்கியநாதன் மதுக்கரை வணிகர் சங்க தலைமை பொதுச் செயலாளர் A.E செந்தில்குமார் தலைவர் V.சசிதரன் பொருளாளர் V.சந்திர குமார் போட்டோகிராபர் M.ஜான் நிர்வாகிகள் கிளை நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் ஆலோசனை கூட்டத்தில் மதுக்கரை ரயில்வே மேம்பாலம் பணி செயல்பட மற்றும் மாற்று பாதை அமைத்து தர மாநில தலைவர் விக்ரம் ராஜா அவர்களிடம் மனுவை பொதுச் செயலாளர் A.E.செந்தில் குமார் போட்டோகிராபர் Mஜான் வழங்கினர் உடன் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கிளை நிர்வாகிகள் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்ட நிகழ்ச்சி சிறப்பு நடைபெற்றது




## க.க.சாவடியில் மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் சார்பாக ஆர்ப்பாட்டம்

கோவை, நவ.07-

கோவை மாவட்டம் க.க. சாவடியிலுள்ள எட்டிமடை பேரூராட்சி அலுவலகத்திற்கு முன்பு பல ஆண்டுகளாக இயங்கி வரும் அரசு உயர்நிலை பள்ளியில் 450 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளும் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் விளையாடுவதற்கு விளையாட்டு மைதானம் வேண்டும் என்று கோரிக்கை வைத்ததின் பேரில் எட்டிமடை பேரூராட்சியில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆறு ஆண்டுகள் ஆகியும் இதுவரை விளையாட்டு மைதானத்திற்கு உண்டான இடத்தை ஒதுக்கி தராத தமிழக அரசை கண்டித்தும் பள்ளி கல்வித்துறையை கண்டித்தும் மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் சார்பில் எட்டிமடை பேரூராட்சி அலுவலகத்திற்கு முன்பு மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் நிறுவனத் தலைவர் வே.ஈஸ்வரன் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் றி.றி.முத்துசாமி, அமைப்பு செயலாளர் செல்வராஜ், பொருளாளர் பெருமாள்சாமி, தலைமை நிலைய செயலர் ராஜ் உறுப்பினர்கள் அப்பாஸ், ரமேஷ், உள்ளிட்ட நிர்வாகிகளும் பல்வேறு கட்சிகளை சேர்ந்த தோழர்களும் க.க. சாவடி கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் ஆசிரியர், பொதுமக்கள் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

க.க.சாவடி அரசு உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்காக குரல் கொடுத்த மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் நிறுவன தலைவர் வே. ஈஸ்வரன் டிஜிட்டல் மீடியா செய்தியாளர்களுக்கு சிறப்பு பேட்டியளித்தார்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கென, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும்வாக்காளர் கணக்கெடுப்புப் பணிக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்

### மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

இந்திய தேர்தல் ஆணை யத்தின் வழிகாட்டுதலின்படி, 01.01.2026ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, வருகின்ற 04.12.2025 வரை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (BLO) வாக்காளர் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

அவ்வாறாக நடைபெறும் வாக்காளர் கணக்கெடுப்பு பணியின் போது, தற்போதைய நாள் வரை வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும், சுய விபரங்கள் பகுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள கணக்கெடுப்புப் படிவங்கள் இரட்டைப் பிரதிகளில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவல ர்களால் வாக்காளர்களது இல்லங்க ளிலேயே வழங்கப்படவுள்ளது.

அக்கணக்கெடுப்புப் படிவங்களை பெற்ற வாக்காளர்கள், கணக்கெடுப்புப் படிவத்தினை முழுவதுமாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு, தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் (BLO) வழங்கிட வேண்டும்.

அவ்வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கெடுப்புப் படிவத்தின் ஒரு பிரதியைப் பெற்றுக்கொண்டு, அவர்களது ஙிலிளி செயலியில் உள்ளீடு செய்வார்கள். மேலும், ஒரு பிரதியில் கையொப்பமிட்டு அந்தந்த வாக்காளர்களிடத்தில் வழங்குவர்.

மேலும், கணக்கெடுப்பின் போது தங்களது குடும்பத்தில் காலஞ்சென்ற உறுப்பினர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பின், அதன் விபரத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் தெரிவித்திடல் வேண்டும். அதுமட்டுமன்றி, இரட்டைப் பதிவு, நிரந்தரமாக வெளியூர் சென்றுவிட்ட வாக்காளர்களது விபரங்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பின் அதனையும் வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் தெரிவித்திடல் வேண்டும். கணக்கெடுப்புப் பணியின் போது வாக்காளர்கள் எவ்வித ஆவணங்களையும் இணைத்து வழங்க வேண்டிய அவசியமில்லை.

கணக்கெடுப்புப் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்பட்ட படிவங்களின் அடிப்படையில் வருகின்ற 9.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அதற்கென வருகின்ற 4.12.2025 வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புப் படிவங்களை வாக்காளர்களுக்கு வழங்கி, பூர்த்தி செய்த கணக்கெடுப்புப் படிவங்களை சேகரிக்க உள்ளனர்.

வாக்காளர்கள் https://voters.eci.gov.in என்ற வலைதளத்தின் வாயிலாக தங்களது சுய விபரங்களை அறிந்து கொள்ளலாம். மேலும், ணிசிமிழிணிஜி செயலி மூலமாகவும் படிவங்களை நிரப்பி பதிவேற்றம் செய்து கொள்ளாலாம்.

எனவே, தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை 100 சதவீதம் சரியாக தயாரிப்பதற்கும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது களவிசார ணையின் போது பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும். மேலும், பொதுமக்கள் இவ்வாய்ப்பினை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## பிராங்க்ளின் டெம்பிள்டன் நிறுவனம் பிராங்க்ளின் இந்தியா மல்டிஃபேக்டர் ஃபண்டை அறிமுகப்படுத்துகிறது

கோயம்புத்தூர், நவ.06-

இந்த நிதி, தனியுரிமை கொண்ட மல்டிஃபாக்டர் அளக்கூறு மாதிரியைப் (quantitative model) பயன்படுத்தி, நீண்டகால செல்வ வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முக்கிய அபாய அளவுகோள்களை கவனத்தில் கொண்டு, சமநிலையைப் பேணுவதும், இழப்பின் அபாயத்தை குறைப்பதும் நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், (04 நவம்பர் 2025) - பிராங்க்ளின் டெம்பிள்டன் (இந்தியா), இன்று பிராங்க்ளின் இந்தியா மல்டிஃபேக்டர் ஃபண்ட் (எஃப்ஐஎம்எஃப்) அறிமுகம் குறித்த அறிவிப்பை வெளியிட்டது, இது மல்டிஃபேக்டர் அடிப்படையிலான அளக்கூறு முதலீட்டு உத்தியைப் பின்பற்றும் ஒரு திறந்தமுடிவு பங்குத் திட்டமாகும். தரம், மதிப்பு, உணர்வு, மாற்றுகள் (QVSA) போன்ற காரணிகளின் அடிப்படையில் பங்குகளைத் தேர்ந்தெடுக்க எஃப்ஐஎ ணம்எஃப் தரவு சார்ந்த, முறையான அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. முதலீட்டு பிரபஞ்சம் சந்தை மூலதனத்தால் இந்தியாவில் பட்டியலிடப்பட்ட முதல் 500 நிறுவனங்களை உள்ளடக்கியது. இந்த நிதி, ஒழுங்கமைக்கப்பட்ட மாதிரி சார்ந்த செயல்முறையையும் நிதி மேலாளரின் நுண்ணறிவையும் இணைத்து, அபாயம் சரிசெய்யப்பட்ட வருமானத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த என்ஃஎப்ஓ, 10 நவம்பர் 2025 முதல் 24 நவம்பர் 2025 வரை சந்தாவிற்கு திறந்திருக்கும், இந்த காலப்பகுதியில் ஒவ்வொரு யூனிட்டும் ரூ.10/க்கு கிடைக்கும்.

இந்த அறிமுக நிகழ்வில் பேசிய பிராங்க்ளின் டெம்பிள்டன் இந்தியாவின் தலைவர் அவினாஷ் சத்வாலேகர் அவர்கள் இவ்வாறு கூறினார், "தொழில்நுட்பம் நமது அன்றாட வாழ்வில் ஆழமாகப் பதிந்துள்ளது, நாம் எவ்வாறு வேலை செய்கிறோம், தொடர்பு கொள்கிறோம், அன்றாட முடிவுகளை எடுக்கிறோம் என்பதை மறுவடிவமைக்கிறது. தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், செயற்கை நுண்ணறிவின் வருகை ஆகியவற்றுடன், போர்ட்ஃபோலியோ மேலாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காண உதவும் பரந்த அளவிலான தரவை பகுப்பாய்வு செய்ய அளக்கூறு தரவு (quantitative data) மாதிரிகளை உருவாக்குவது இப்போது சாத்தியமாகும். பிராங்க்ளின் இந்தியா மல்டிஃபேக்டர் ஃபண்ட் (எஃப்ஐஎம்எஃப்) முதலீட்டு உத்திகளில் தொழில்நுட்பத்தின் இந்த ஒருங்கிணைப்பை எடுத்துக்காட்டுகிறது. மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் தரவு பகுப்பாய்வுகளை நிபுணர் மனித மேற்பார்வையுடன் ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான முதலீட்டு தீர்வை இது வழங்குகிறது."

"எங்கள் முதலீட்டாளர்களுக்கு பிராங்க்ளின் இந்தியா மல்டிஃபேக்டர் ஃபண்டை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மாறும் சந்தை நிலைகளில் தகுந்து செயல்படும் வகையிலும், அபாயத்தை உணர்ந்த அணுகுமுறையிலும் வடிவமைக்கப்பட்ட இந்த நிதி, நீடித்த மதிப்பை வழங்கும் நோக்கத்துடன் செயல்படும்," என்று அவர் மேலும் தெரிவித்தார்.

"ஃபிராங்க்ளின் டெம்பிள்டன் இன்வெஸ்ட்மென்ட் சொல்யூஷன்ஸ் நிர்வாக துணைத் தலைவர் - தலைவர் ஆடம் பெட்ரிக் அவர்கள் இவ்வாறு கூறினார், "ஃபிராங்க்ளின் டெம்பிள்டன் இன்வெஸ்ட்மென்ட் சொல்யூஷன்ஸ் குழு 98 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் நிர்வகிக்கிறது. 160 ஆண்டுகளுக்கும் மேலான முதலீட்டு நிபுணத்துவத்துடன், எங்கள் உலகளாவிய அளவு முதலீட்டு குழு, முதலீட்டிற்கான ஆழமான அறிவையும் கடுமையான, முறையான அணுகுமுறையையும் கொண்டு வருகிறது, இது பாரம்பரிய அடிப்படை முதலீட்டு பாணியிலிருந்து வேறுபட்டது. ஆர்ஓஇ (ROE), மதிப்பீடு மற்றும் வருவாய் உந்துதல் போன்ற பங்கு சார்ந்த குறிகாட்டிகளை எதிர்கால சமிக்ஞைகள் மற்றும் மேக்ரோ பொருளாதார நுண்ணறிவுகளுடன் இணைப்பதன் மூலம், இந்திய முதலீட்டாளர்களுக்கு தரவுகளை அடிப்படையாகக் கொண்ட, மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கக்கூடிய மற்றும் நல்ல பொருளாதார பகுத்தறிவில் மூழ்கிய ஒரு உத்தியை நாங்கள் வழங்குகிறோம். மேலும், செயலில் உள்ள மனித மேற்பார்வைக்கான நெகிழ்வுத்தன்மையை நாங்கள் பராமரிக்கிறோம், மனித தீர்ப்பு தரவு சார்ந்த நுண்ணறிவுகளை பூர்த்தி செய்வதை உறுதிசெய்கிறோம்."

"ஃபிராங்க்ளின் இந்தியா மல்டிஃபேக்டர் ஃபண்டின் நிதி மேலாளர் அரிஹந்த் ஜெயின் அவர்கள் இவ்வாறு கூறினார், "ஃபிராங்க்ளின் இந்தியா மல்டிஃபேக்டர் ஃபண்ட், பன்முகப்படுத்தப்பட்ட போர்ட்ஃபோலியோவை உருவாக்க ஒரு ஒழுக்கமான, அளவு சார்ந்த செயல்முறையைப் பயன்படுத்துகிறது. அடிப்படையான அளக்கூறு மாதிரியானது, தரம், மதிப்பு, உணர்வு, மாற்றுகள் என நான்கு முதன்மை வகைகளாக தொகுக்கப்பட்ட பரந்த அளவிலான காரணிகளைப் பயன்படுத்தி பங்குகளை மதிப்பிடுகிறது, செயல்திறனின் பல பரிமாணங்களைப் பிடிக்க வடிவமைக்கப்பட்ட துணை அளவீடுகளின் சிக்கலான வலையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு காரணிகள் வெவ்வேறு சந்தை சுழற்சிகளில் செயல்படுகின்றன. தரம், மதிப்பு, உந்தம், குறைந்த ஏற்ற இறக்கம் போன்ற காரணிகளில் முதலீடு செய்வது முதலீட்டாளர்கள் ஒற்றை காரணி அணுகுமுறையுடன் தொடர்புடைய இழப்பு அபாயத்தைக் குறைக்க உதவும். இந்த மாதிரி தரம் சார்ந்த மற்றும் அளக்கூறு தரவுகள் ஆகிய இரண்டையும் சேர்த்து செயல்படுகிறது, நன்கு வரையறுக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் மதிப்பெண்களை வழங்குகிறது. அளக்கூறு மாதிரியானது போர்ட்ஃபோலியோ அமைக்கும் மதிப்பீட்டு செயல்முறையின் ஒரு பகுதியாக 40க்கும் மேற்பட்ட காரணிகளைக் கருத்தில் கொள்கிறது. எதிர்பாராத வெளிப்பாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் துறை, அளவு, ஆபத்து மற்றும் பாணி சார்புகள் கவனமாக நிர்வகிக்கப்படுகின்றன, மேலும் போர்ட்ஃஃபோலியோ கலவையை மேம் படுத்த அபாய மேலாண்மை உத்திகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன."

எஃஐஎம்எஃப்க்கான முதலீட்டு மாதிரியானது, அளக்கூறு முதலீட்டுடன் இந்தியப் பங்குச் சந்தைகளின் விரிவான பகுப்பாய்வை ஊக்குவிக்கிறது. தற்போதுள்ள காரணிகளை முறையாக மறுமதிப்பீடு செய்து, புதியவற்றை இணைத்து, சமிக்ஞை நம்பகத்தன்மையை நிலைநிறுத்துவதன் மூலம், மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு தொடர்ந்து மாற்றியமைக்கும் நோக்கத்துடன் இந்த மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது.



## அன்னபூரணி மல்லிகா ரங்கநாதன் 07 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு படத்திறப்பு மற்றும் அன்னதானம் நிகழ்ச்சி

கோவிலம்பாக்கம், நவ.06-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கம் ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்., அன்னபூரணி மல்லிகா ரங்கநாதன் 07 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு படத்திறப்பு மற்றும் அன்னதான நிகழ்ச்சி (நவம்பர் : 04) சத்யா நகர் 8 வது தெரு, பிள்ளையார் கோவில் அருகில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், (மு)மாவட்ட பிரதிநிதி, சுண்ணாம்பு கொளத்தூர் கழகச் செயலாளருமான டாக்டர்., ஏ. ரங்கநாதன் தலைமையில் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள். உடன் 05 வது வார்டு உறுப்பினர்., ஆர் .சொக்கலிங்கம், ஒன்றிய பிரதிநிதி., ஈ.மேகநாதன் மற்றும் கோவிலம்பாக்கம் ஊராட்சி திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வருகின்ற 8.11.2025 அன்று சிவகங்கை மாவட்ட முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.06-

சிவகங்கை மாவட்டம் பொதுவிநியோகத் திட்டத்தில் 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் வருகின்ற 8.11.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை / நகல் அட்டை, கைப்பேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை தெரிவிக்கும் பொருட்டும் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் வட்டத்தில் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## வேலூர் அடுத்த கொணவட்டத்தில் ரூபாய் 75 லட்சம் மதிப்பிலான நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா

வேலூர், நவ.06-

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி, பணம் வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வேலூர் கோட்டை மைதானத்தில் 04.11.2025 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.75 இலட்சம் மதிப்பிலான நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, (05.11.2025) குத்துவிளக்கேற்றி பார்வையிட்டனர். இந்நிகழ்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், வட்டாட்சியர் வடிவேலு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் லெட்சுமணன் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் செவிலியர்கள் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தமிழக அரசின் புதிய மினி பஸ் திட்டத்துக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு

சென்னை:, நவ.06-

தமிழக அரசின் புதிய மினி பஸ் திட்டத்துக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் போக்குவரத்து வசதியில்லாத கிராமப்புறங்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் வகையில், புதிய மினி பஸ் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக 2025 ஏப்ரலில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்து தனியார் பஸ் ஆப்பரேட்டர்கள் சார்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதி, புதிய மினி பஸ் திட்டத்தால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை எனக் கூறி, வழக்குகளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து தனியார் பஸ் ஆப்ரேட்டர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு வழக்கு, நீதிபதிகள் சுரேஷ்குமார் மற்றும் ஹேமன்சந்தன் கௌடா அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், ஏற்கெனவே திட்டம் அமலுக்கு கொண்டு வரப்பட்டு, 1,350 பேருந்துகள் உரிமம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 500 விண்ணப்பங்கள் பரிசீலினையில் உள்ளதாகவும், விரைவில் அனுமதி வழங்கபடும் எனத் தெரிவித்தார்.

இதனைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த திட்டத்துக்கு தடை விதிக்க முடியாது என தெரிவித்தனர். அதேசமயம், பேருந்துகளுக்கு உரிமம் வழங்கியது என்பது, மேல் முறையீட்டு வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு கட்டுப்பட்டது எனக் கூறி, விசாரணையை ஜனவரி மூன்றாவது வாரத்துக்கு தள்ளிவைத்தனர்.



# "வாய்க்கால்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூர்வாருவதற்கு" தனியார் நிறுவனத்தின் பங்களிப்பின் கீழ் புதிதாக வழங்கப்பட்ட "மினி எஸ்குவேட்டர் வாகனம்" பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது

மதுரை, நவ.06-

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை தூர்வாருவதற்கு தனியார் நிறுவனத்தின் (Amman Construction) பங்களிப்பின் கீழ் புதிதாக வழங்கப்பட்ட மினி எஸ்குவேட்டர் வாகனத்தை ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப,. அவர்கள் இன்று (05.11.2025) பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள்.

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களுக்கு உட்பட்ட 100 வார்டுப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களுக்கு உட்பட்ட 100 வார்டுப் பகுதிகளில் உள்ள சாலையோர மழைநீர் வாய்க்கால்கள் மற்றும் கால்வாய்களை தூர்வாருவதற்கு ஏற்கனவே 6 மினி எஸ்குவேட்டர் (Mini Excavator) வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது கூடுதலாக தனியார் நிறுவனத்தின் (Amman Construction) பங்களிப்பின் கீழ் ரூ.7.67 லட்சம் மதிப்பீட்டில் புதிய மினி எஸ்குவேட்டர் வாகனம் வழங்கப் பட்டுள்ளது. இந்த புதிய வாகனத்தை ஆணையாளர் பயன்பாட்டிற்கு இன்று கொண்டு வந்தார்கள்,

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், உதவிப் பொறியாளர் (வாகனம்) திரு.அமர்தீப், மாமன்ற உறுப்பினர் திரு.முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி, கொணவட்டம் நியாயவிலைக் கடையில் இருப்பு பொருட்கள் குறித்து கடை விற்பனையாளர் சிவகுமாரிடம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பொருட்கள் இருப்பு குறித்து உரையாடி ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வட்டாட்சியர் வடிவேல், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் லெட்சுமணன் ஆகியோர் உடனிருந்தனர்.



# அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்: இபிஎஸ் வழங்கிய ஆலோசனைகள் என்ன?

சென்னை, நவ.06-

அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், சட்டப்பேரவை தேர்தல் வியூகம் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று நடை பெற்றது. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் நடப்பதால், இந்தக் கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்பட்டது.

இதுகுறித்து அதிமுக சார்பில் வெளியான அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக எம்.ஜி.ஆர். மாளிகையில் இன்று மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், எடப்பாடி பழனிசாமி கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களில், பூத் (பாகம்) கிளைக் கழகங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரையும் ஆன்லைனில் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவது குறித்த விவரங்களை மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் முழுமையாகக் கேட்டறிந்து, இப்பணியினை விரைந்து முடிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து, எடப்பாடி பழனிசாமி, 1.1.2026 ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இது மிகவும் முக்கியமான பணி என்பதாலும், வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரிசெய்வதற்கு இது சரியான தருணம் என்பதாலும் இதில் தனிக் கவனம் செலுத்தி, சரியான வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் விவரங்களை தலைமைக் கழகத்திற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, 2026ல் நடைபெற உள்ள சட்டப்பேரவை பொதுத் தேர்தலையொட்டிய பணிகளை விரைந்து ஆற்றுவது குறித்தும் விரிவாக ஆலோசனை வழங்கினார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாம்பரம் மேற்கு பகுதியில் கழக 54வது ஆண்டு பொதுக்கூட்டத்தில் ஸ்டாலின் வீட்டுக்கு சென்றவர்கள் சட்டசபையில் கருணாநிதியை புகழ்ந்து பேசியவர்கள் எடப்பாடியாரை பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது?

## கழக மகளிர் அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி பேச்சு

தாம்பரம், நவ.06-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், தாம்பரம் மேற்கு பகுதி கழகம் சார்பில் கழகத்தின் 54வது ஆண்டு தொடக்கவிழாவையொட்டி மேற்கு தாம்பரம் காந்தி ரோடு, நாகாத்தம்மன் கோயில் அருகில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஸ்டாலின் வீட்டுக்கு சென்றவர்கள் - சட்டசபையில் கருணாநிதியை புகழ்ந்து பேசியவர்கள் எடப்பாடியாரை பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது? என்று கழக மகளிர் அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி பேசினார்.



கூட்டத்திற்கு தாம்பரம் மேற்கு பகுதி கழக துணைச் செயலாளரும் 54வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ஸ்டார் பிரபா தலைமை வகித்தார்.

தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளரும் முன்னாள் நகரமன்ற துணை தலைவருமான ஏ.கோபிநாதன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் தாம்பரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எம்.கூத்தன், தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்லார் செழியன், மாவட்டக் கழகப் பொருளாளர் பி.கே.பரசுராமன், பகுதி, ஒன்றிய, நகரக் கழகச் செயலாளர்கள் சேலையூர் ஜி.சங்கர், இரா.மோகன், எம்.தேவேந்திரன், த.ஜெயப்பிரகாஷ், இ.சம்பத்குமார், எம்.ஜி.கே.கோபிகண்ணன், ஞா.சந்திரசேகர்ராஜா, பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள் டி.மோகன்ராஜ், இ.வெங்கடேசன், எம்.கார்த்திக், தேவிஸ்ரீதரன், விமல்பிரியா தன்ஸ், பி.விஜயலதா, வி.கே.ரகுபதி, கே.ரகு, கே.ஸ்ரீதரன், ஆர்.அமுதா, ஏ.எம்.சேகர், சி.சுபாஷினி, எஸ்.செந்தில்குமார், சைதை ப.ராஜ், எ.நெடுமாறன், எஸ்.எஸ். எஸ்.சிவா, எம்.செல்லப்பன், ஆர்.மிர்துன் ஜெயன், ஆர்.எம்.பி.முத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் ஆ.ஜெகஜீவன்ராம், டாக்டர் வி.இ.சுரேஷ்குமார், எம்.செந்தில்குமார், எம்.ஆர்.எல்.ஜெயரத்தினம், கே.பி.ராஜமாணிக்கம், எம்.மோகன், கடப்பேரி ஜெ.மாரி, ஜி.ராம்குமார், வி.ஆர்.ராஜி, எம்.மல்லிகா, எம்.பாலகணேஷ், சுரேஷ் கன்னியப்பன், ஆர்.லலித் நிவேதித்தன், எஸ்.ஜெயப்பிரகாஷ், துரை தியாகராஜன், சி.தன்ஸ், வி.அசோக்குமார், எம்.இராஜேந்திரன், பி.ரவீந்திரன், கே.எம்.இராதாகிருஷ்ணன், எல்.ஆகாஷ், இ.தங்கராஜ், ஏ.ஓம்பிரகாஷ், பி.பாலாஜி, ஜி.தங்கராஜ், கே.சுந்தர், பி.பாஸ்கர், வளையல் எம்.வேலு, ஆர்.லோகநாதன், டி.புனித் ஜோசப், வி.கிஷோர் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

கூட்டத்தில் கழக மகளிர் அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி, செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, தலைமைக் கழகப் பேச்சாளர்கள் வீரக்கனல் சிதம்பரம் கோ.ஜெயவேல், ஆரணி கே.கோகுல் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கழக மகளிர் அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி பேசுகையில்,

இதயதெய்வம் அம்மா அவர்களின் மறைவிற்கு பின்பு இந்த இயக்கத்தை முடக்க வேண்டும், கழக ஆட்சியை கலைக்க வேண்டும் என்று கெட்ட எண்ணம் கொண்டு செயல்பட்டவர்களின் எண்ணங்களை தவிடுபொடியாக்கி பல்வேறு சோதனைகளை சந்தித்து கழகத்திற்காக தியாகம் செய்து, தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்கள். எதிரிகள் தொடர்ந்த பொய்யான வழக்குகளையெல்லாம் நீதிமன்றங்கள் மூலம் சந்தித்து, அந்த வழக்குகளில் வெற்றி கண்ட ஒப்பற்றத் தலைவர் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார். அப்படிபட்ட நம் தலைவரை முதலமைச்சராக வரக்கூடாது என நினைக்கிறார்கள்.

அப்படிபட்டவர்களை இதயதெய்வம் அம்மாவின் ஆத்மா ஒருபோதும் மன்னிக்காது. துணை முதலமைச்சர் உதயநிதி, பாதிக்கப்பட்ட நெல் மூட்டைகளை பார்க்காமல் ரயில் நிலையத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளையெல்லாம் பார்த்துவிட்டு, அதற்கு ஒரு போட்டோ ஷூட்டும் எடுத்து அதனை மீடியாக்களிடம் காட்டியுள்ளார். உதயநிதி ஸ்டாலினுடைய இந்த ஏமாற்று வித்தையெல்லாம் தமிழக மக்கள் புரிந்துகொண்டார்கள். இனி ஒருபோதும் இவர்களுடைய ஏமாற்று வித்தைகள் எல்லாம் எடுபடாது. வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் மிகப்பெரிய தோல்வியை இந்த ஏமாற்று வித்தைகாரர்களுக்கு பரிசாக வழங்க மக்கள் தயாராகிவிட்டார்கள். கழக ஆட்சி கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தலைமையில் அமைந்திட நாம் உறுதிகொண்டு உழைப்போம், வென்று முடிப்போம்.

இவ்வாறு கழக மகளிர் அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி பேசினார்.

மேலும் இக்கூட்டத்தில் கழக மகளிர் அணி இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கணிதா சம்பத், மாவட்டக் கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், பொதுக்குழு உறுப்பினர்கள் தா.மு.துரைவேல், கே.ஆறுமுகம், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் எஸ்.மூர்த்தி, பி.பஞ்சாட்சரம், மாவட்ட அணி நிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள் எம்.வேலு, இ.வி.சம்பத், எஸ்.மாரி, டி.டி.தில்லைராஜ், எம்.கே.நாகூர்கனி, மார்க்கெட் ஜி.பாபு, ப.வெங்கட்ராமன், மாமன்ற உறுப்பினர்கள் சுபாஷினி புருஷோத்தமன், வாட்டர் கே.ராஜ் உட்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் 32வது வட்டக் கழகச் செயலாளர் ஜெ.ஜெயக்குமார், தாம்பரம் மேற்கு பகுதி ஆர்.வி.யுவராஜ் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

# அதிமுகவில் இருந்து என்னிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது: செங்கோட்டையன்

கோவை, நவ.06-



"தேர்தல் ஆணையத்திடம் கொடுக்கப்பட்ட 250 பக்க கடிதத்தில் முக்கியமான விஷயங்கள் இருக்கிறது, அதை வெளியில் சொல்ல முடியாது. அதிமுகவில் இருந்து என்னிடம் உறுதியாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது" என முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக, உண்மையான அதிமுக இல்லை என தேர்தல் ஆணையத்திடம் சொல்லி இருப்பது எந்த அடிப்படையில் என்ற கேள்விக்கு, "பின்னால் இதுகுறித்து நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். எனது அடுத்தக்கட்ட நடவடிக்கையை பொறுத்திருந்து பாருங்கள். நல்லதே நடக்கும்.என பதிலளித்தார்.

இரட்டை இலை சின்னம் குறித்து விசாரிக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்திருப்பது குறித்த கேள்விக்கு, "தேர்தல் ஆணையத்திடம் கொடுத்த கடிதத்தில் 250 பக்கம் இருக்கிறது, அதை வெளியில் சொல்ல முடியாது, அதில் முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. தேர்தல் ஆணையத்திற்கு கொடுத்து இருப்பதை வெளியில் சொல்லக்கூடாது எனவும் விதிகள் இருக்கிறது." என செங்கோட்டையன் தெரிவித்தார்.

அதிமுக எந்த மாதிரியான குடும்பக் கட்சியாக இருக்கின்றது என்ற கேள்விக்கு, "உங்களுக்கு எல்லாம் தெரியும் , மீடியாவில் வந்து கொண்டு தான் இருக்கிறது, அதை நான் சொல்லத் தேவையில்லை." என பதிலளித்தார். உங்களை பாஜக இயக்குகிறதா என்ற கேள்விக்கு, "53 ஆண்டுகளாக கட்சியில் இருக்கிறேன், என்னை தனிப்பட்ட முறையில் யாரும் இயக்க முடியாது." எனத் தெரிவித்தார்.

மூத்த அரசியல்வாதியான உங்களை நீக்கி இருக்கின்றார்களே என்ற கேள்விக்கு, "இது அவரிடம் (எடப்பாடி பழனிசாமி) கேட்க வேண்டிய கேள்வி" என்றார். மேலும், மனோஜ் பாண்டியன் அதிமுகவில் இருந்து திமுகவில் இணைந்திருப்பது அவருடைய விருப்பம் எனவும் அவர் கூறினார்.

அதிமுகவின் குடும்ப ஆதிக்கம் குறித்த கேள்விக்கு, "கட்சியில் மகன் தலையிடுகின்றார், மைத்துனர் தலையிடுகின்றார். மாவட்டத்தில், தொகுதிக்குள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறனர். கட்சியில் மருமகன் தலையீடும் இருக்கிறது. எங்கெங்கு இயக்குகின்றனர் என்பது ஊடகங்களுக்கு தெரியாதது கிடையாது, அதனால் அதைப் பற்றிச் சொன்னேன். இது மூத்த நிர்வாகிகளுக்கு இடையூறாக இருக்கும்" எனவும் தெரிவித்தார்.

அதிமுக தரப்பிலிருந்து யாராவது பேச்சுவார்த்தை நடத்துகின்றனரா என்ற கேள்விக்கு, "யார் யார் பேசுகின்றனர் என்பது அவர்களுக்கும் எனக்கும் தான் தெரியும். அதை வெளிப்படுத்தினால் அவர்களுக்கும் ஆபத்து இருக்கிறது. பேச்சுவார்த்தை நடப்பது உண்மைதான்" என முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பதிலளித்தார்.

# தமிழகத்தில் 218 விஏஓக்கள் நேரடி நியமனத்துக்கு இடைக்கால தடை: உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை, நவ.06-



தமிழகத்தில் 218 கிராம நிர்வாக அலுவலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப டிஎன்பிஎஸ்சிக்கு இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக கிராம நிர்வாக அலுவலர் சங்க பொதுச்செயலாளர் அருள்ராஜ் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அகமது ஃபயஸ் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், 'தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் காலியாக உள்ள 218 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்ப செப்.1 முதல் 15ம் தேதி வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க மே மாதம் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாவட்ட அளவில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணியிட மாறுதல் வழங்கிய பிறகு காலியுள்ள கிராம நிர்வாக அலுவலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம்.

ஏற்கெனவே கிராம நிர்வாக அலுவலர்களின் முதுநிலை பட்டியலை கருத்தில் கொள்ளாமல், பணியில் சேர்ந்த தேதி அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மாறுதல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவது தவறு எனக் கூறி உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்தச் சூழலில் 218 காலிப்பணியிடங்களை நேரடியாக நிரப்ப முடிவு செய்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு அரசு பட்டியலை அனுப்பியுள்ளது. இதனால் இடமாறுதலுக்காக பல ஆண்டுகளாக காத்திருப்பவர்களின் வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது.

218 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை மாவட்ட பணியிட மாறுதல் மூலம் நிரப்பாமல் நேரடி நியமனம் மூலம் நிரப்ப டிஎன்பிஎஸ்சிக்கு இடைக்கால தடை விதித்தும், தகுதி வாய்ந்த கிராம நிர்வாக அலுவலர்கள் இடமாறுதல் கோரிய மனுக்களை பரிசீலித்து அவர்களுக்கு உரிய இடங்களில் இடமாறுதல் வழங்கிய பிறகு நேரடி முறையில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்பவும் உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி குமரேஷ்பாபு விசாரித்தார். பின்னர் நீதிபதி, மாவட்ட பணியிட மாறுதல் நடத்தாமல் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நேரடி முறையில் டிஎன்பிஎஸ்சி நிரப்ப தடை விதிக்கப்படுகிறது. மனு தொடர்பாக வருவாய் துறை ஆணையர், டிஎன்பிஎஸ்பி தலைவர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை நவ.14க்கு தள்ளிவைத்தார்.

## அமராவதி புதூர், செஞ்சை நாட்டார், சங்கராபுரம் மற்றும் பாதரக்குடி ஆகிய

# கண்மாய்களின் மீன்பிடி உரிமையினை 3 ஆண் டு காலத்திற்கு குத்தகைக்கு விட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன

கண்மாய்களின் மீன்பிடி உரிமை யினை 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தகவல். சிவகங்கை மாவட்டம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டிலுள்ள அமராவதி புதூர், செஞ்சை நாட்டார், சங்கராபுரம் மற்றும் பாதரக்குடி ஆகிய 4 கண்மாய்களின் மீன்பிடி உரிமையினை 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேலும், www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் கூடுதல் விவரங்கள் பெறலாம். மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் குறிப்பிட்டுள்ள இணையதளம் மூலமாக மட்டுமே தெரிவிக்கப்படும். மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த தெளிவுரைகள் மற்றும் விளக்கங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரிலோ அல்லது 04575 240848 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது adfsivaganga@gmail.com அல்லது மின்னஞ்சல் முகவரியின் வாயிலாகவோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## வேலூர் அப்துல்லாபுரத்தில், அரசு தொழிற்பயிற்சி பள்ளி அருகே ரூ.32 கோடி மதிப்பில் மினி டைட்டில் பார்க் திறப்பு விழா

**தமிழக முதல்வர் ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைப்பு**

வேலூர், நவ.06-
வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, சென்னை டு பெங்களூரு தேசிய நெடுஞ் சாலை, அப்துல் லாபுரம் அரசு தொழிற்ப யிற்சி பள்ளி அருகே, ரூ.32 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நியோ டைடல் வேலூர் மினி தொழிற் பூங்காவை, தமிழக முதல்வர் ஸ்டாலின், சென்னை தலைமை செயலகத் திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, குத்துவி ளக்கேறி பார்வையிட்டனர். இந்நிகழ்வின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார். கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், வேலூர் ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞான சேகரன், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு கழக கண்காணிப்பு பொறியாளர் பாலாஜி, அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தலைமை பொதுக்குழு உறுப்பினர் ப.ரவி திருவுருவ படத்திறப்பு (ம) நினைவஞ்சலி நிகழ்வு 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி



மேடவாக்கம், நவ.06-
சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் மற்றும் துணை முதல்வர்.,உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் சோழிங்கநல்லூர், புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சியில் (நவம்பர் : 04 )பிள்ளையார் கோவில் தெருவில் மாலை 5 மணிக்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர், சித்தாலப்பாக்கம் ஒன்றிய கவுன்சிலர் ,முன்னாள் .மேடவாக்கம் ஊராட்சி மன்ற தலைவருமான .,மேடவாக்கம். ப.ரவி திருவுருவ படத்திறப்பு (ம) நினைவஞ்சலி செலுத்தி அவரின் நினைவாக பொதுமக்களுக்கு 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை மேடவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்., சிவபோசனம் ரவி மற்றும் புனித தோமையார் மலை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்., ஆர். எஸ். லோகேஸ்வரா மிகச் சிறப்பாக ஏற்பாடுகள் செய்திருந்தனர். திமுக இளைஞரணி கழகச் செயலாளருமான : உதயநிதி ஸ்டாலின், மேடவாக்கம் ப.ரவி செய்த சாதனைகளையும் பொதுமக்களுக்கு ஆற்றிய தொண்டுகளைப் பற்றியும் பாராட்டி நினைவஞ் சலி செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், ஜெகத்ரட்சகன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், தமிழச்சி தங்கபாண்டியன், , சோழிங்கநல்லூர்.,எம். எல்.ஏ., எஸ். அரவிந்த் ரமேஷ், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் , கோ.காமராஜ் , 15 வது மண்டல குழு தலைவர்., வி .இ. மதியழகன்,14 வது மண்டல குழு தலைவர்., எஸ்.வி .ரவிச்சந்திரன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்., பிரபாகராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், ஜே. இ .பாண்டியன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி., கோவில ம்பாக்கம் ஏ. ரங்கநாதன், புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம்., ஜி .வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர் ,சங்கீதா பாரதி ராஜன், ஒன்றிய கழக துணைச் செயலாளர், எச்.டி .போஸ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர், ஓ.கே.எஸ். சதீஷ், ஒன்றிய கவுன்சிலர், கல்பனா சுரேஷ், கோவிலம்பாக்கம், 5 வது வார்டு உறுப்பினர், ஆர். சொக்கலிங்கம் மற்றும் மாவட்ட வட்ட பகுதி ஒன்றிய கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மானாமதுரை: ஆசிரியையிடம் நகை பறிப்பில் ஈடுபட்ட சிறுவன் உட்பட 6 பேர் கைது போலீஸ் அதிரடி

மானாமதுரை, நவ.06-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கீழமேல்குடி ரோட்டில் வசித்து வருபவர் சுதா (39)இவர் சுந்தரநடப்பு அரசு பள்ளியில் ஆசிரியை யாக பணியாற்றி வருகிறார். இவர் கடந்த அக் 29ஆம் தேதி வழக்கம் போல பணியை முடித்து விட்டு மானாமதுரைக்கு இருச்சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது செய்களத்தூர் விளக்கு ரோடு அருகே 2 இருச்சக்கர வாகனத்தில் முகமூடி அணிந்து வந்த 5 பேர் ஆசிரியை சுதாவை கீழே தள்ளிவிட்டு அவர் அணிந்திருந்த 11 பவுன் தங்க நகையை பறித்து சென்றனர்.இதில் ஆசிரியை சுதா காயமடைந்தார் இச்சம்பவம் குறித்து மானாமதுரை சிப் காட் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் காவல் துறையினர் குற்றவாளிகளை தீவிரமாக தேடி வந்த நிலையில் இவ் வழக்கில் தொடர்புடைய ராமநாதபுரம் மாவட்டம் கீழத்துவலைச் சேர்ந்த நாகமுனீஸ்வரன் (26) பீபியேந்தலைச் சேர்ந்த சூர்யபிரகாஷ் (18),ராமேஸ் வரத்தைச் சேர்ந்த ராம்பிரசாத்(எ) பிரசாத் (25), மதுரை தெப்பக்குளத் தைச் சேர்ந்த துரைராஜ் (18), மற்றும் 16 வயது சிறுவன் ஒருவர் மற்றும் தங்க நகைகளை வைத்திருந்த தேளியைச் சேர்ந்த திராவிடமணி (19) ஆகியோரை நேற்று கைது செய்தனர். காவல்துறை யினர் விசாரணையில் இவர்கள் அனைவரும் சென்னையில் தங்கி ஒன்றாக வேலை பார்த்த நிலையில் கடந்த அக்30 ஆம் தேதியன்று நடைபெற்ற பசும்பொனிற்கு வந்தபோது இந்த சம்பவத்தில் ஈடுபட்டதாக காவல்துறையினர் தெரிவித் துள்ளனர். தென் மாவட்டங்களை பொருத்தவரை அக் 24 முதல் அக்30 காவல்துறை யினரின் ரோந்து பணி அதிகமாகவே இருக்கும் சூழலில் இச்சம்பவம் அரங்கேறி உள்ளது. சிவகங்கை மாவட்டத்தின் பொருத்தவரை கொலை கொள்ளை போன்ற நிகழ்வுகள் சர்வசா தாரண மாக நடை பெறுகிறது தவறு செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக் காததன் பிரதிபலியாக இது பார்க்க ப்படுகிறது. எவரேனும் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டால் காவல்துறையினர் கைது செய்த சில மணி நேரத்தில் அவர்களுக்கு அரசியல் கட்சி பிரமுகர்கள் ஜாமினில் வெளிவரும் அளவிற்கு சிபாரிசு செய்வதன் விளைவாக இது கருதப்படுகிறது. இதன் பின்னர் ஆவது தவறு செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க மாவட்ட நிர்வாகம் காவல்துறையினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் சிலர் கருதுகின்றனர்..



## புதிய மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் திட்டத்தின் கீழ் விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.06-
சிவகங்கை மாவட்டத்தில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2023-2024) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படவுள்ளது. அதில், புதிய மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் திட்டமானது (2023-2024) பொதுப்பிரிவின் கீழ்-1 ஹெக்டேருக்கு 40% மானியத்தில், ஒரு அலகிற்கான விலை - 7.0 இலட்சம் / ஹெக்டேர் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ளது.

எனவே, புதிய மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் நபர்கள் 5/3, யூனியன் வங்கி மாடியில்,பெருமாள் கோயில் தெரு சிவகங்கை - 630561 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்ப படிவம் பெற்று விண்ணப்பிக்கலாம். கூடுதல் விபரங்களுக்கு மீன்வள ஆய்வாளர் அவர்களை 9384824553 என்ற அலைபேசி எண்ணிலும், மீன்வள மேற்பார்வையாளர் தரம் II அவர்களை 9790656919 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.



## குடியாத்தத்தில் ரூ 1.88 கோடி மதிப்பில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் திறப்பு விழா

வேலூர், நவ.06-
வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் புதிய சார் பதிவாளர் அலுவலகம் திறப்பு விழா, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வேலூர் கோட்டை மைதான த்தில் நடைபெற்ற நல திட்ட விழா நிகழ்ச்சியை தொடர்ந்து, ரூ.1.88 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள குடியாத்தம் சார்பதிவாளர் அலுவல கத்தை திறந்து வைத்ததை தொடர்ந்து, வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி புதிய சார் பதிவாளர் அலுவல கத்தை நேரில் சென்று பார்வையிட்டு குத்துவிள க்கேற்றி பார்வை யிட்டார். இந்நிகழ்வின் போது குடியாத்தம் சட்டமன்ற உறுப் பினர் வி.அமுலு விஜயன், பதிவுத்துறை துணைத் தலைவர் இ.அருள்சாமி, மாவட்ட பதிவாளர் மு.ராஜா, குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, குடியாத்தம் நகர் மன்ற தலைவர் சௌந்தரராசன், வட்டா ட்சியர் பழனி, குடியாத்தம் சார் பதிவாளர் சேகர், பதிவாளர் துறை சார் ந்த அலுவலர்கள், பணியா ளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## வேலூர் கோட்டை மைதானத்தில் அரசு நலத்திட்ட விழா: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றி நலதிட்டங்களை வழங்கினார்

வேலூர், நவ.06-
வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, புகழ்பெற்ற வேலூர் கோட்டை மைதானத்தில் அரசு நலதிட்ட விழா கூட்டம், வேலூர் மாவட்டத்தில் 11.80 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 31 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 17.91 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 15 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 49,021 பயனாளிகளுக்கு 414.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி ஆகியோர் வழங்கினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு விஜயன், ஈஸ்வரப்பன், அ.செ.வில்வநாதன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு, துணை மேயர் சுனில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநி திகள், அரசு நல திட்ட உதவி பெறும் பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## மதுரை மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு "மனநல ஆலோசனை மையம்"

மதுரை, நவ.06-
மதுரை மாநகராட்சி மாணவர்களின் மனநலத்தை மேம்படுத்தும் நோக்கத்தில், மாநகராட்சி பள்ளிகளில் மனநல ஆலோசனை மையம் (Counselling Centre) ஏற்படுத்தப் பட்டுள்ளது. பள்ளி மாணவர்களிடைய காணப்படும் தற்கொலை எண்ணங்கள், தவறான பழக்க வழக்கங்கள், மனஅழுத்தம் மற்றும் பாடங்களில் குறைந்த மதிப்பெண்கள் போன்ற பிரச்சனைகளை அடையாளம் கண்டு, அவர்களுக்கு தேவையான மனநல ஆலோசனையை வழங்கி மாணவர்களின் நலன் காக்க மாநகராட்சியின் சார்பில் மனநல ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் மாணவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிபடுத்தி நிபுணர் அவர்களின் ஆலோசனையைப் பெற முடியும். இதனால் மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டில் அதிக கவனம் செலுத்துவதற்கு இந்த மையம் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

இதற்காக வாரந்தோறும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலை ப்பள்ளிகளில் மாண வர்களை நிபுணர் நேரடியாக சந்தித்து ஆலோசனை வழங் குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1. திங்கட்கிழமை மாநகராட்சி ஈ.வெ. ரா. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தெற்கு வெளிவீதி,
2. செவ்வாய்க்கிழமை மாநகராட்சி மணிமேகலை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காமராஜர் சாலை
3. புதன்கிழமை மாநகராட்சி மறைமலை அடிகளார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தெற்குவாசல்,
4. வியாழக்கிழமை திரு.வி.க.மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, தத்தனேரி
5. வெள்ளிக்கிழமை மாநகராட்சி இளங்கோ மேல்நிலைப்பள்ளி, செனாய்நகர் ஆகிய பள்ளிகளில் மனநல ஆலோசகர் தங்களின் பணியை மேற்கொள்வார்.

தேவையெனில் பிற மாநகராட்சி பள்ளிகளும் தங்கள் பள்ளி மாணவர்களை பெற்றோர் அனுமதியுடன் மேற்கண்ட பள்ளிகளுக்கு அழைத்து சென்று மனநல ஆலோசனை பெறலாம். மாநகராட்சி பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பள்ளி மேலாண்மை குழுவின் (SMC) ஒத்துழைப்புடன் மனநல ஆலோசனை தேவைப்படும் மாணவர்கள் இந்த மனநல ஆலோசனை மையத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மதுரை மாநகராட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



## வரதராஜபுரத்தில் சாரதி நினைவு அறக்கட்டளையில் தீபாவளி திருநாளில் நடைபெற்ற நற்பணி நிகழ்ச்சிகள்

வரதராஜபுரம், நவ.06-
காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட வரதராஜபுரத்தில் அக்டோபர் 20, 2025 அன்று தாம்பரம் ராயப்பா நகரில் உள்ள சாரதி நினைவு காப்பகத்தின் தீபாவளி கொண்டாடத்தில் ஹாப்பி வாக்கர்ஸ் குழு உறுப்பினர்கள் நீதிபதி மூ.புகழேந்தி, மூர்த்தி உமா ஸ்டுடியோ கோவிந்தசாமி, மோகன்தாஸ், சேகர் மற்றும் சென்னை தாம்பரம் சென்ட்ரல் லையன்ஸ் கிளப் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

காலை நேரத்தில் ஹாப்பி வாக்கர்ஸ் குழு சாரதி இல்ல மூத்தவர்களுக்கு காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு மற்றும் மூத்தோருக்காக லுங்கி, டிஷர்ட், நைட்டி போன்ற புதிய ஆடைகளையும் வழங்கினார்கள்.

மாலை நேரத்தில் லயன்ஸ் கிளப் சார்பில் 2 பாய்கள், 2 சீலிங் ஃபேன்கள், படுக்கைத் தாள்கள், துடைப்பான், குளியல் சோப்புகள், துணி துவைக்கும் சோப்புகள், துவைப்புப் பொடி ஆகிய பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும், மூத்தவர்களின் தேவைக்காக ரூ.1500 நிதியுதவியும் வழங்கப்பட்டது சாரதி அறக்கட்டளையின் நிறுவனர் என்.பால்ராஜ் அவர்கள் அனைத்து மனிதநேய உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்தார்




## கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்

கோவை, நவ.06-
கோவை மாவட்டம், சர்க்கார் சாமகுளம் ஒன்றியம் குரும்பபாளையம் பகுதியில் சர்க்கார் சாமகுளம் சிறப்பு நிலை பேரூராட்சி 10 முதல் 15 வார்டு பொதுமக்களுக்கான குறைகளை தீர்க்கும் "உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்" பேரூராட்சி மன்ற தலைவர் கோமளவள்ளி கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. பேரூராட்சி துணைத் தலைவர் விஜயகுமார் மற்றும் செயல் அலுவலர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார்கள். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக குடிமை பொருள் வட்டாட்சியர் ஜெயபாரதி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொ.அ.ரவி, முன்னாள் எம்.பி., ஏ.பி.நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்று முகாமை துவக்கி வைத்தார்கள். இம்முகாமில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு மகளிர் உரிமைத் தொகைக்காக நீண்ட நேரம் காத்திருந்து விண்ணப்பித்தார்கள். நிகழ்வில் உடன் திமுக பேரூர் கழகச் செயலாளர் சுரேந்திரன், மாவட்ட பிரதிநிதி கந்தசாமி, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தியாகு வார்டு கவுன்சிலர்கள் மற்றும் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161